முக்கிய வார்த்தைகள்:
*சேவை செய்யுங்கள் / உதவுங்கள்*
*மனிதர்களும் / மற்றவர்களும்*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**15 ஆகஸ்ட் 2025 / 21 ஸஃபர் ஹிஜிரி 1447**

# மற்றவர்களுக்கு சேவை செய்வதன் மூலம் அல்லாஹ்வின் உதவியை அடைதல்

**الْحَمْدُ لِلَّهِ الَّذِي جَعَلَ الْإِحْسَانَ مِفْتَاحًا لِرَحْمَتِهِ، وَخِدْمَةَ الْخَلْقِ سَبِيلًا إِلَى مَحَبَّتِهِ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَىٰ سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَىٰ آلِهِ وَأَصْحَابِهِ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ حَقَّ تُقَاتِهِ، فَقَدْ فَازَ الْمُتَّقُوْنَ.**

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**

அல்லாஹ் நம்மைப் படைத்த அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவை நினைவில் கொள்ளுங்கள்! அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளையும் நிலைநாட்டி, அவற்றைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்; அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள்; நம்மீது ஏற்படுத்தப்பட்டுள்ள மார்க்கக் கடமைகளை முடிந்த அளவு சிறப்பாக நிறைவேற்றுங்கள். அல்லாஹ்வின் கிருபையும் அவனது உதவியும் எப்போதும் நமக்குக் கிடைக்கட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!**

உண்மையில், தொழுகை, திருக்குர்ஆன் ஓதுதல், நோன்பு ஆகிய வணக்க வழிபாட்டுச் செயல்களின் மூலம் ஒருவர் தன்னை அல்லாஹ்வின் பக்கம் நெருக்கமாக்கிக் கொள்ள முடியும். எனினும், இது போன்ற வணக்க

வழிபாட்டுச் செயல்களைத் தவிர, வேறு ஏதாவது வகையில், வேறு ஏதாவது செயல்கள் மூலம் நம்மை நாம் அல்லாஹ்வின் பக்கம் நெருக்கமாக்கிக் கொள்ள முடியுமா? இக்கேள்விக்குப் பதில் கிடைக்க திருக்குர்ஆனின் "அல்-மாவூன்" எனும் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்களில் நாம் சிந்தனை செய்ய வேண்டும்.

இந்த அத்தியாயத்தில், தொழுகைகளைப் பராமுகமாகவும் கவனமில்லாமலும் தொழக் கூடியவர்களுக்கு எதிராக விமர்சனம் செய்யப்படுகிறது. அம்மாதிரியானத் தொழுகைகள் அவர்களுக்குப் பலன் தராது எனவும் கூறப்படுகிறது. காரணம், அவர்கள் தொழுகைகளைப் பராமுகமாகவும் தற்புகழ்ச்சிக்காகவும் தொழுகிறார்கள் என்பதோடு, மார்க்க சம்பந்தமான மற்ற தவறுகளையும் செய்கிறார்கள். அதாவது, உதவிகள் தேவைப்படுவோருக்கு அவர்கள் உதவி செய்வதில்லை.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, இதே அத்தியாயத்தின் 7-வது வசனத்தில் கூறுகிறான்:

وَيَمۡنَعُونَ ٱلۡمَاعُونَ ۝٧

பொருள்: "[புழங்குவதற்குத் தேவைப்படும் அற்பமான பொருள்களைக் கூட அவர்கள் மற்றவர்களுக்குக் கொடுப்பதில்லை]; [உதவிகள் தேவைப்படுவோருக்கு] அவற்றைக் கொடுப்பதை விட்டும் மற்றவர்களைத் தடுக்கவும் செய்கிறார்கள்"

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

தற்போது ஓதிக் காண்பிக்கப்பட்ட வசனமாகிறது, அல்லாஹ்வுடனான நமது உறவை சிறப்பாக அமைத்துக் கொள்வது, சக மனிதர்களுடனான நமது உறவைச் சிறப்பாக அமைத்துக் கொள்வது ஆகிய இரண்டும் மார்க்கத்தின் கடமைகளாகும் எனத் தெரிவிக்கின்றது. இரண்டு கடமைகளையும்

சரிசமமாக, ஏக காலத்தில் செயல்படுத்துவது அவசியமாகும். ஒரு முஸ்லிம், மற்றவர்களுக்குச் சேவை செய்வது, அவர்களுக்கு உதவி செய்வது ஆகியவற்றைப் புறக்கணித்து விட்டு, வணக்க வழிபாட்டுச் செயல்களில் மட்டும் கவனம் செலுத்திக் கொண்டிருக்கக் கூடாது. மாறாக, மற்றவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதன் மூலமாகவும், அல்லாஹ்வின் கிருபையையும் அவனது உதவியையும் அடைலாம் என்பதிலும் நம்பிக்கைக் கொள்ள வேண்டும்.

இரண்டாவது கேள்வி: நமது சகோதர, சகோதரிகளுக்கு எப்படி உதவி செய்வது? என்பதாகும். இவ்விஷயத்தில், இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள் ஹதீதில் தெரிவித்துள்ளதன் பிரகாரம், மூன்று வகையில் நாம் மற்றவர்களுக்கு உதவி செய்யலாம். இந்த ஹதீதை இமாம் முஸ்லிம் [ரஹ்] அவர்கள் பதிவு செய்து அறிவிக்கின்றார்கள்:

**முதலாவதாக: உணர்வுப்பூர்வமாக உதவுதல்**

இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்:

"எவரொருவர், இவ்வுலகில் ஒரு முஸ்லிமுடைய சுமையைக் குறைக்கின்றாரோ அவரது சுமைகளில் ஒன்றை மறுமைத் தீர்ப்பு நாளின் போது அல்லாஹ் குறைப்பான்" [ஹதீது நூல்: முஸ்லிம்]

எவர்கள் கவலை, பதட்டம், உணர்வுப் பூர்வமான துன்பங்கள் ஆகியவற்றை எதிர்கொண்டு வருகிறார்களோ, அவர்கள் விஷயத்தில அக்கறை செலுத்துமாறு நாம் வேண்டப்பட்டுள்ளோம். தொழிற்கூடங்களில் நம்முடன் தொழில் புரியும் பெரியவர்கள் முதற்கொண்டு, கல்விக்கூடங்களில் கல்வி கற்கும் பிள்ளைகள் வரை அனைவர் விஷயத்திலும் அக்கறை செலுத்த வேண்டும். குறிப்பாக, வீடுகளில் தனியாக வசித்து வரும் முதியவர்கள், தனிமையில் தமது காலத்தைக் கழித்து வருபவர்கள் ஆகியோர் விஷயத்தில் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். அவர்களைச் சென்றடைந்து அவர்களுடன் அன்புடன் நடந்து கொள்ள வேண்டும். அப்போது நாம் அவர்களின் வாழ்க்கையில் ஓரளவாவது மகிழ்ச்சியை ஏற்படுத்தலாம்.

**இரண்டாவதாக: பொருளாதார உதவி செய்தல்**

இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்:

"எவரொருவர், இவ்வுலகில் ஒருவரது பிரச்சனையை எளிதாக்குகின்றாரோ அவரது இம்மை, மறுமை இரண்டு வாழ்க்கையின் பிரச்சனையை அல்லாஹ் எளிதாக்குவான்" [ஹதீது நூல்: முஸ்லிம்]

தற்போது கூறப்பட்ட ஹதீதானது, உடல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் உதவுவதன் அவசியத்தைச் சுட்டிக் காட்டுகின்றது. எவராவதொருவர் நோய்வாய்ப்பட்டுள்ளார்; அல்லது வருவாயை இழந்துள்ளார்; அல்லது பில்கள், கல்விக்கூடக் கட்டணங்கள் ஆகியவற்றைச் செலுத்த வேண்டிய அவசியத்தில் உள்ளார்; அல்லது அன்றாடத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குப் பணம், காசுகளின் பால் அவசியமானவராக இருக்கின்றார் என்பதை அறிந்தால் உடனே அவர்களுக்கு உதவுவதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும். தேவையுள்ளவர்களில் குறிப்பாக நாம் யாரையும் அறியவில்லையெனில், பள்ளிவாசல்களில் சமுதாயப் பொருள் சேகரிப்புக் கூடங்கள் உள்ளன; அங்கு நாம் பங்காற்றி சேவை செய்யலாம். மேலும், அல்லாஹ் நமக்கு அருளியுள்ள உடல் ரீதியிலான பலத்தின் மூலமும் பங்காற்றலாம்; உதாரணமாக, பஸ், எம்.ஆர்.டி களில் நிற்க முடியாதவர்களுக்கு நமது இடத்தை அவர்களுக்கு வழங்கி உதவலாம். லிப்ட்களில் ஏறச் செல்லும் போது நம்மை விட அதிகத் தேவையுள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கலாம்.

**மூன்றாவதாக: கண்ணியத்தைப் பாதுகாப்பது**

இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்: "எவரொருவர் ஒரு முஸ்லிமுடைய குறையை இவ்வுலகில் மறைத்தாரோ, அவரது இம்மை, மறுமை வாழ்க்கைகளின் குறைகளை அல்லாஹ் மறைப்பான்" [ஹதீது நூல்கள்: புகாரி, முஸ்லிம்]

தற்போது ஓதப்பட்ட ஹதீதில் கூறப்படுள்ள கருத்தானது, சமூக ஊடகங்கள் மற்றும் சேனல்களின் தகவல்கள் அதிகரித்து வரும் இக்காலத்தில் மிகவும்

முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கண்ணியத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதன் பொருள், பாவங்கள் தொடர்ந்து நடைபெறுவதை அனுமதிக்க வேண்டும் என்பதல்ல. மாறாக, தவறு செய்பவர்களை மிகச் சரியான முறையில் திருத்த முயல வேண்டும்; அவர்களுக்கு உபதேசம் செய்ய வேண்டும் என்பதாகும். மற்றவர்களின் குறைகளை பகிரங்கப் படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என்பதுமாகும்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**
வணக்க வழிபாடுகள் மற்றும் மார்க்கச் செயல்பாடுகள் ஆகியவற்றை நிறைவேற்றுதில் நிலைத்து நிற்கும் முஸ்லிம் சமுதாயத்தை உருவாக்குவதற்காக நாம் அனைவரும் இணைந்து உழைப்போமாக! அச்சமுதாயத்தை மனிதகுலத்துக்குச் சேவை செய்வதில் துடிப்பானதாக ஆக்குவோமாக! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா இம்மையிலும் மறுமையிலும் அவனது உதவியை நமக்கு வழங்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.

## <u>இரண்டாவது பிரசங்கம்</u>

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا اْلمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اَللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ

فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلاَمَ وَالأَمْنَ وَالأَمَانَ لِلْعَالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.